

சென்னை, கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று (17.02.2025) நடைபெற்ற ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் எச்டிஎப்சி வங்கி இணைந்து நடத்தும், நிதி கல்வி அறிவு திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியை, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் தொடங்கி வைத்து, சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் டி.ஆனந்த், எச்டிஎஃப்சி சென்னை மண்டல அலுவலர் பாலாஜி கிருஷ்ணாமாச்சாரியார், எச்டிஎப்சி வங்கி உயர் அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நலப்

# பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கல்வியறிவு திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – மா.மதிவேந்தன் பங்கேற்பு!

சென்னை, பிப். 18 - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக நேற்று (17.02.2025) சென்னை கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நலப் பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் எச்.டி.எப்.சி வங்கி இணைந்து நிதி கல்வியறிவு திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியினை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர். மா. மதிவேந்தன் மற்றும் மேயர் திருமதி ஆர்.பிரியா ஆகியோர் தொடங்கி வைத்து சிறந்த ஆசிரியர் மற்றும் மாணவியர்களுக்கு நற்ச் சான்றிதழ் வழங்கி விழாவில் பேருரையாற்றினர்.

அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு - மருத்துவர் மதிவேந் தன் ஆகியோர் இந்நிகழ்ச்சி யில் தெரிவித்ததாவது,

ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் எச்.டி.எப்.சி வங்கி இணைந்து நிதி கல்வியறிவு திட்ட விழிப்புணர்வு நிகழ்ச் சியினைத் தொடங்கி வைப்ப தில் பெரு மகிழ்ச்சி அடைகி றோம். இத்திட்டம் பெற்றோர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கு கல்வி மற் றும் அதிகாரம் அளிக்கும் வகையிலும், சமுக பொறுப்பு உறுதிப்பாட்டின் ஒரு பகுதி யாக இத்திட்டம் செயல்ப டுத்தப்பட்டு வருகிறது.

சேமிப்புகள், முதலீடுகள் மற்றும் அரசாங்க நிதி உதவி திட்டங்கள் பற்றி தகவ லறிந் துக் கொள்ளவும், குடும்பத்திற்குத் தேவையான நிதி அறிவையும் தெரிந்துக் கொள்ளும் வகையில் மாணாக்கர்களுக்கு அடிப் படை வங்கி கருத்துக்கள், சேமிப்பின் முக்கிய தத்துவம் மற்றும் நிதி ஒழுக்கம் பற்றிய எளிமையாக ஈர்க்கக்கூடிய வகையிலும், பெற்றோர்க ளுக்கு சேமிப்பு உத்திகள், முதலீட்டுக்கான வழிகள் மற் றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக் கக்கூடிய அரசாங்க நிதி உதவி திட்டங்களை தெரிந்துக் கொள்ளும் வண்ணம் எச். டி.எப்.சி வங்கியின் வல்லுனர் கள் விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளனர். நிதிக் கருத்துக் களை புரிந்துக் கொள்வதற் கும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுவதற்கு எளிமை யாக அமையும் என அமைச் சர் பெருமக்கள் தெரிவித் தனர்.

இந்நிகழ்ச்சியில், வி.க சட் டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க. லட்சுமி பிரியா, ஆதிதிராவி டர் நலத்துறை ஆணையர் த.ஆனந்த், எச்.டி.எப்.சி வங்கி சென்னை மண்டல அலுவலர் பாலாஜி கிருஷ்ணமாச்சாரியார், பெரு நகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சரவ ணன், பள்ளி தலைமையாசிரி யர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (17.02.2025) மண்டலம் 10. வார்டு 142, சைதாப்பேட்டை, மாந்தோப்பில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 55வது ஆண்டு விழாவில் பங்கேற்று அதிக மதிப்பெண்கள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கி விழா பேருரையாற்றினார்கள். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார். மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் எம்.ஸ்ரீதரன், ப.சுப்பிரமணி, தா.மோகன்குமார், பள்ளித் தலைமை ஆசிரியர் ஆர்.பத்மஜா மற்றும் அரசு உயரலுவலர்கள். பள்ளி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### மும்மொழி தேசியக் கல்வி கொள்கையை ஏற்க மிரட்டல் விடும்

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கண்டனம்!

## ஆதித்தமிழர் பேரவை இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, பிப்.18 - புதிய கல்விக் கொள்கை மற்றும் மும்மொழித் திட டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டால் மட்டுமே ஒன் றிய அரசு தன் நிதியை விடு விக்கும் என மிரட்டல் தொனி யில் கூறியிருக்கும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிர தானை ஆதித்தமிழர் பேரவை வன்மையாக கண்டிக்கிறது.

எந்தவொரு சமூகமும் முன்னேற்றம் அடைய கல்வி என்பது மிக மிக அவசியமான பேராயுதமாக இருக்கிறது.

திராவிட மாடல் என்பது கல்விக்கு முக்கி யத்துவம் கொடுத்து இரு மொழிக் கொள்கை மூலம் பகுத்தறி வால் செதுக்கி உயர் கல்வியில் மற்ற மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி தமிழகம் தான் முன்னோடியாக சிறந்து விளங்குகிறது என்று தேசிய தர வரிசைப் பட்டியல் வெளிக் காட்டியுள்ளது.

ஆனால் பா.ச.க. ஒன்றிய அரசு கல்வி விசயத்தில் அறிவி யலையும் அறிவையும் வளர்த் துக் கொள்ள தயாராக இல்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக

கல்வியில் மும்மொழித் திட்டம் மற்றும் புதிய கல்விக் கொள்கை மூலம் திரிபு வர லாற்றை திணித்து புராண இதி காச குப்பைகளை பாடத்திட் டங்களில் சேர்க்கும் படியான மோசடி செயல்களை அரங் கேற்றவும் இதன் மூலம் இந் தியை வலிய திணிக்க முற்படுகிறது.

இந்நிலையில் பா.ச.க. ஒன் றிய அமைச்சர் தர்மேந்திர பிர தான் அவர்களிடம் தமிழகத் திற்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை எப் போது? வழங்குவீர்கள் என பத்திரிக்கையாளர்கள் கேட்ட தற்கு மும்மொழித் திட்டத்தையும் புதிய கல்விக்



கொள்கையையும் ஏற்றுக் கொண்டால்தான் நிதி வாங்கு வோம் இல்லையென்றால் தர முடியாது என்று அடாவடி யாக கூறியிருக்கிறார் ஒன்றிய அமைச் சர். இந்தி மொழியை தமிழர்கள் கற்றால் தான் நிதி வழங்குவோம் என்று கூறுவது பச்சை அயோக்கியத்தனம். இதை ஏற்றுக் கொண்டால் தான் நிதி தருவோம் இல்லை யென்றால் தரமாட்டோம் என்று கூறுவது கூட்டாச்சி தத் துவத்திற்கு எதிரானது. தமிழ் நாட்டை வஞ்சிப்பதோடு மிரட்டிப் பார்க்கும் செயல் . அங்கிகரிக்கப்பட்ட 22 தேசிய மொழிக்கும் முக்கியத் துவம் கொடுக்க வேண்டிய அமைச் சர் இந்திக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் அமைச்சரின் பதில் எப்படி நியாயம் ஆகும்?

இது தமிழ் மக்களை கொந்த ளிக்கச் செய்திருக்கிறது. ஒன்றிய அமைச்சர் கூறும் இந்தப் பதில் ஒன்றிய அரசின் பா.ச.க. குரல் தான் தொடர்ந்து இது போன்று தமிழகத்தை வஞ்சிப் பார்களேயானால் தமிழர்கள் நாங்கள் ஒன்றிய அரசுக்கு எதி ராக "வரி கொடா இயக்க" த்தை தொடங்கக் கூடிய நிலைக்கு தள்ள வேண்டாம்-

இவ்வாறு இரா.அதிய மான் அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

### புதிய கல்விக் கொள்கையை ஏற்க ஆணவமாக பேசிய

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கண்டனம்!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, பிப்.18 தமிழ்நாடு ஆசிரியர் முன் னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

ஒன்றிய அரசின் புதிய கல் விக் கொள்கையை ஏற்றால் தான் தமிழ்நாட்டு அரசுக்கு ஒதுக்க வேண்டிய நிதி வழங் கப்படும் என்ற ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதா னின் பேச்சு ஒட்டுமொத்த தமிழ்நாட்டை கலங்கடித்து இருக்கிறது.ஆசிரியர், மாண வர் சமுதாயத்தை தாண்டி பொதுமக்கள் மத்தியிலும் இது மிகுந்த வருத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பங்களிப்பு மற் றும் மாநில அரசு பங்களிப்பு டன் அனைவருக்கும் கல்வித் திட்டம் ( சர்வ சிக்ஷா அபி யான்.SSA) உருவாக்கப்பட் டது அதைத் தொடர்ந்து அத் திட்டம் அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்ட மாக(RMSA) மாற்றம் செய்யப் பட்டு இரண்டு அரசுகளின் பங்களிப்பின் மூலம் நடை பெற்று வந்தது.

இத்திட்டத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு பி எம் ஸ்ரீ என்ற பள்ளிகள் புதிதாக உரு வாக்கப்படும் எனவும் இந்தப் பள்ளிகளில் மும்மொழி கொள்கை கடைபிடிக்கப்ப டும் எனவும் ஒன்றிய அரசு ஒரு திட்டத்தை கொண்டு வந்து அதற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் கையெ ழுத்திட வேண்டும் என தமிழ் நாட்டு அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இரு மொழிக் கொள்கை பல ஆண்டுகளாக தொடர்ந்து கடைபிடிக்கப் பட்டு வரும் சூழலில் மும் மொழிக் கொள்கையை ஏற்க முடியாது இந்த பி எம் ஸ்ரீ பள்ளிகளில் தமிழ்நாட்டில் அமல்படுத்திட முடியாது, எந்த வகையிலும் இந்தி திணிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற உறுதியோடு இதுவரை தமிழ்நாடு அரசு அதில் கையொப்பம் இட வில்லை அதை காரணமாக வைத்து தற்பொழுது புதிய கல்விக் கொள்கையை முழுவ துமாக ஏற்றால்தான் தமிழ் நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்க முடியும் என்று ஒன்றிய கல்வி அமைச் சர் தெரிவித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள் ளது .

தமிழ்நாட்டில் இரு மொழி கல்விக் கொள்கை பல ஆண்டுகளாக தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகி றது.மேலும் தமிழ்நாட்டின் கல்வித்தரம் இந்திய ஒன்றி யத்திலே முன்னிலையில் உள் ளது.

பல்வேறு கல்வியாளர்கள் முதல் அறிவியல் அறிஞர்கள் வரை தமிழ்நாட்டு இரு மொழி கல்விக் கொள்கை யில் பயின்றவர்கள் என்பதை மறந்து விட முடியாது.

தமிழ்நாட்டில் கல்வி, கலாச்சாரம், பண்பாடு, முத லியவற்றை கருத்தில் கொண்டு தாய் மொழியாம் தமிழ் மொழியை பாதுகாத்தி டும் நோக்கோடு தமிழகத்திற் கென்று இருமொழி கல்விக் கொள்கை பல ஆண்டுகளாக பின்பற்ற பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் எந்த ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசின் இரு மொழி கல்விக் கொள்கையில் தலையிட்ட



தில்லை, அவ்வாறு தலை யிட்டு வெற்றி கொண்ட வர லாறு இல்லை .

அந்த வகையில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள புதிய கல்விக் கொள்கையில் மும்மொழி கல்வி கொள்கை ஏற்க வேண்டும் என வும்,அதன் அடிப்படையில் இயங்கும் பி எம் ஸ்ரீ பள்ளிக ளின் புரிந்துணர்வு ஒப்பந்தத் தில் தமிழ்நாடு அரசு கையெ ழுத்திட்டால்தான் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கக்கூடிய நிதியை ஒதுக்க முடியும் என்று என்று சொல்லி இருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே வேறு எந்த முதலமைச்சரும், செய்யாத வகையில் துணிந்து, துணிச்சலோடு தமிழ்நாட் டிற்கு இன்று ஒரு கல்விக் கொள்கையை உருவாக்க குழு அமைத்து அந்த குழு வின் அறிக்கை தற்போது பெறப்பட்டுள்ளது.

விரைவில் மாநிலக் கல் விக் கொள்கை அறிவிப்பு வெளியிடப்பட உள்ள சூழ லில் புதிய கல்விக் கொள் கையை தமிழ்நாடு அரசு எப் படி ஏற்க முடியும்

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள புதிய கல்விக் கொள்கையில் இடம்பெற்றி ருக்கும் மும்மொழி கல்விக் கொள்கை, குலக்கல்வி கொள்கை, 3,5.8 வகுப்புக ளுக்கு பொது தேர்வு இவற் றையெல்லாம் ஏற்க வேண் டும் என சொல்வதை எப்படி ஏற்க முடியும்.

ஒருபோதும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளாது

இந்திய ஒன்றியத்திற்கு அதிக வரி வருவாய் வழங்கும் முதன்மை மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை சர் வதிகார நோக்கத்தோடு ஒதுக்க மாட்டோம் என்று சர் வாதிகாரத்தோடு ஒன்றிய அமைச்சர் சொல்வது கூட் டாட்சி தத்துவத்திற்கு எதிரா னது.

இதை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் வன்மை யாக கண்டிக்கிறது.

நாங்கள் உழைத்து எங்கள் உழைப்பின் மூலமாக நாங் கள் செலுத்தக்கூடிய வரி வரு வாய் பெருமளவுக்கு பங்கு போட்டு கொண்டு ஆட்சி நடத்துகின்ற ஒன்றிய அரசு எங்களுடைய 40 இலட்சத் திற்கு மேற்பட்ட ஏழை எளிய அரசு பள்ளி மாணவர் களின் வாழ்வதாரத்தை கேள் விக்குறியாக்குவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

இது கூட்டாட்சி தத்து வத்திற்கு எதிரானது.

தமிழ்நாட்டிற்கு வழங்கக் கூடிய நிதியை வழங்காமல் தொடர்ந்து வழங்காமல் தமி ழக மாணவர்களை ஒன்றிய அரசு வஞ்சித்தால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரத்தை வலுப்படுத்தக்கூடிய வகையில் தமிழ்நாடு ஆசிரி யர் முன்னேற்ற சங்கம் ஒட்டு மொத்த ஆசிரியர் சங்கங் களை ஒன்றிணைந்து மிகப்பெரிய போராட் டத்தை ஒன்றிய அரசுக்கு எதி ராக முன்னெடுப்போம்.

இவ்வாறு கு.தியாகராஜன் அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

### மாவட்டச் செயலாளர்– அமைச்சர் தா.மோ அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் - பாக முகவர்கள் (BLA2) கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், பிப்.18- குன்றத்தூர் தெற்கு ஒன் றிய கழகச் செயலாளர், படப்பை,ஆ. மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன் றிய திமுக செயற்குழு உறுப் பினர் கூட்டம், மற்றும் பாக முகவர்கள் (BLA2) கூட்டம் இன்று (18.02.2025 செவ் வாய்க்கிழமை) மாலை 4.00 மணி அளவில் கரசங்கால் ஜெ.சி. திருமண மண்டபத் தில் அவைத்தலைவர் மு. சுப் பிரமணி தலைமையில் நடை பெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபு ரம் வடக்கு மாவட்டச் செய லாளர் - குரு- சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் , சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மீஞ் சூர், கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், ஒன்றிய குழு தலைவர் திருமதி. சரஸ்வதி மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஒன்றிய நிர்வாகிகள் வ. நந் தகோபால், ஏ. மணி வாசுகி மகேஷ், சி. பார்த்தசாரதி, வி. ஹரி,மு. ராஜேந்திரன், மா. பரிமளாழகன், முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், சங் கீதா வேலு, பொன்.ரமேஷ் கவி, எஸ்.கர்ணன், மலர்விழி தமிழ் அமுதன், கு. ஏழுமலை, லட்சுமிஞான சேகர்,ச. பால கிருஷ்ணன், ஜி.ஏ.ராயப்பன், எஸ்.வைரம், தினேஷ் கந்த சாமி, ம.ரேவதி, கே.எம்.சி சத் தியமூர்த்தி, வி. எஸ். கோதண் டராமன், என். எஸ். இளங்கோ, இளைஞர் அணி, ப.அறிவொளி, ரா. தீபக், க.பா. ஆடலரசு,மா.சே. பிர காஷ், பொன். இளைய பாரதி,லோ, சுதாகர், மாண வர் அணி ,அ.ஜமீர், இரா.கும ரவேல்,செ. பார்த்திபன்,

ஆர்.சையத்ரமீஸ், இ. பாலாஜி, மகளிர் அணி.மகா லட்சுமி எட்டியப்பன், மல் லிகா நடராஜன், சோபா ரகு நாதன், விவசாய அணி, ஜி. இருசப்பன், விவசாய தொழி லாளர் அணி,ஏ.இ. பரசுரா மன்,ம. அசோக்குமார்,ஏ.இ. பஞ்சாட்சரம், வழக்கறிஞர் அணி, ப.வேல்முருகன்,ச. ரஞ் சித் குமார்,இரா. சந்திரசேகர், தகவல் தொழில் நுட்ப அணி,மூ. குமார்,வ. வீரபாண் டியன்,ர. தமிழ்தாசன், கா. யுவராணி ஆகியோர் பங்கேற் கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட் ட-ஒன்றிய அணிகளின் நிர் வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பாகமுகவர் கள்(BLA2) மற்றும் உள் ளாட்சி மன்ற பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவ றாமல் கலந்து கொண்டு சிறப் புக்கும்படி கேட்டுக் கொள் கிறேன்.

பொருள்: மார்ச் 1 கழகத் தலைவர் திராவிட மாடல் முதல்வர் பிறந்த நாள் விழா, கிளைக் கழகம் தோறும் பொது உறுப்பினர் கூட்டம் மற்றும் தேர்தல் பணி குழு உறுப்பினர் கூட்டம், சட்ட மன்ற தேர்தல்-2026, கழக வளர்ச்சி.

இவ்வாறு அவர் தெரிவீத் துள்ளார்.

# சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனை கூட்டம் இன்று (18.2.2025) செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி அளவில் மாவட்ட கழகம் அமைந்துள்ள எண்.20/32 காம்தார் நகர் முதல் தெரு நுங்கம்பாக்கம் சென்னை600 034ல் மாவட்ட அவைத்தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

ஆகவே கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து, கழக ஆக்கப் பணிகள்

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# விகடன் இணையதளம் முடக்கம் - கருத்துரிமை பறிப்பு!

## சென்னை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்!

சென்னை, பிப்.18- விகடன் இணையதளம் முடக்கப்பட்டது, கருத்துரிமை பறிப்பு என்று சென்னை பத் திரிகையாளர் சங்கம் கண்ட னம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.மணி மாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

இந்தியர்களை கை கால்க ளில் விலங்கிட்டு அமெரிக்க அரசு நாடு கடத்திய விவகா ரத்தில், அமெரிக்காவின் அவ மதிப்பை சகித்துக் கொண்ட ஒன்றிய அரசை விமர்சித்து விகடன் கார்ட்டூன் வெளி யிட்டது.

இதற்கு பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை உள் ளிட்டோர் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், விகடன் இணைய தளம் முடக்கப்பட்டுள்ளது.

கருத்து சுதந்திரத்தைப் பறிக்கும் இந்த நடவடிக் கையை சென்னைப் பத்திரி கையாளர் சங்கம் வன்மை யாக கண்டிக்கிறது. இது போன்ற நடவடிக்கைகளை ஒன்றிய அரசு கைவிட வேண் டும் என்றும் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

**மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப் பாளர்கள் கூட்டம், வருகிற 21-02-2025 வெள்ளிக்கிழமை, காலை 09.00 மணியளவில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணாசாலை, "அண்ணா அறிவாலயத்தில்", எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ்காந்தி - இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ். மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி. செந்தில் குமார், கா. அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா, திருமதி ஜெ. வீரமணி, ஜெ. இராம கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள் ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் பிறந்த நாள்; 2) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை.
நாள்- 17.02.2025

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் பாக முகவர்கள் கூட்டம் 1. SMJ மாஹல் 2. பொன்மலர் வளாகம் பெரும்பேர்கண்டிகை 3.ஒன்றிய கழக அலுவலகம் கீழத்திவாக்கம் 4.ஒன்றிய குழு உறுப்பினர் இல்லம் திண்ணலூர் ஆகிய பகுதிகளில் பாக முகவர்கள் கூட்டம் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே. கண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாவட்ட துணை செயலாளர் டி.வி.கோகுலகண்ணன், பேரூர் செயலாளர் வி. எழிலரசன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.உசேன், மாவட்ட மகளிர்.தொ.அ.அமைப்பாள் மாலதி,மாவட்ட ஆதிதிராவிடர். நலக்குழு.து.அமைப்பாள் ஜி.சிவக்குமார் ஒன்றிய அவைதலைவர் வி.ரத்தினவேல், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். எஸ்.யுவராஜ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி ஜெ. பார்த்தசாரதி டி.கருணாகரன் ஒன்றிய துணை செயலாளர்கள் ஏ.சிவக்குமார், சிவா,விஜயா ஒன்றியப் பொருளாளர். எஸ்.ராஜசேக் நிர்வாகிகள், ஜெ.வெங்கடேசன், எஸ்.வெங்கடேசன், என்.பாலசுப்ரமணியன், என்.விரராகவன், ஆர். ராஜசேகா தலைவர்கள், பாலாஜி, சாவித்திரி, பச்சையம்மாள், விஜயன், ஜோதி, செல்லப்பன், சுதாகர், ராஜீவ்காந்தி உள்ளிட்ட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றியம் செல்லாத்தூர் ஊராட்சியில் 13 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நியாய விலை கடையை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ் சந்திரன் அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பெ.பழனி, சி.என்.சண்முகம், செல்லாத்தூர் ப.சம்பத், சத்யராஜ், நாகப்பன், சங்கரன், சி.சுப்பிரமணி, சித்ரா, மாதையா, நவீன், இதயபாண்டி, மணிகண்டன், மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள்கள் பலர் கலந்து கொண்டனர்.